**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 15 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நன்கொடையாக கிடைத்த 12 பொருள் உருப்படிகளும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 7 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு மூலம் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் மற்றும் காணி பெறுமதி மதிப்பிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அனூடாக இனங்காணப்பட்ட கிரயம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பதாக அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக் கணக்கில் ரூபா 3,391,498 ஆன மீதியில் 2016,2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக உள்ளீட்டு வரியாக ஈடுசெய்யப்பட வேண்டிய ரூபா 3,248,621 ஆன மீதியொன்று உள்ளக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் பெறுமதிசேர் வரி மீது வரி பெறுவனவுகளில் ஈடுசெய்தல் மேற்கொள்ளப்பட்டு மீதிகள் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட உள்ளீட்டு வரியாக ஈடுசெய்யப்பட வேண்டிய ரூபா 3,248,621 ஆன மீதி செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக் கணக்கில் காணப்படுவதாக ஏற்றுக்கொள்கின்றேன |
| (இ) | ரூபா 103,961,321 பெறுமதியான 09 காணி மற்றும் 42 கட்டிடங்களுக்குரிய உறுதிகள், நில அளவையாளர் திட்டம், கையளிப்பு சான்றிதழ் மற்றும் பெறுமதி உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற பெறுமதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 42 கட்டிடங்களுக்குரிய உறுதிகள் / நில அளவையாளர் சான்றிதழ் தொடர்பாக எமது உள்ளூராட்சி நிறுவனத்தடமுள்ள தகவல்களை கண்டு பிடிப்பதற்கு சிரமமானதால் குறித்த நிறவனங்களுடன் விசாரித்து உரிய உறுதிகள் கையளிப்பு சான்றிதழ் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக நடவடிக்கை எடுக்கப்படும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,339,638 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,420,109 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் எழுதி கையொபபமட்ட ரூபா 313,068 பெறுமதியான 11 காசோலைகள் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி வரை கையில் வைக்கப்பட்டிருந்தன. | நி.பி 386(4) பிரகாரம் காசோலை செல்லுபடிக் காலம் 30 நாட்களுக்கு மட்டுப்படுத்த வேண்டிய போதிலம் அக்காலஎல்லையை மிகைக்க முன்னர் பெறுனருக்கு வழங்க நடவடிக்கை வேண்டும். | இது தொடர்பாக உரிய உததியோகத்தருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் தற்போது தவறை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 954,981 பெறுமதியான 10 காசோலைகள் பெறுனருக்கு கையளிக்கும் போது காசோலை ஒப்படைப்பு பதிவேட்டில் கையொப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. | நி.பி 389 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 10 காசோலைகளை உரிய பெறுனருக்கு கையளிக்கும் போது காசோலை ஒப்படைப்பு பதிவேட்டில் கையொப்பம் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன் |

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 3,724 | 3,581 | 3,512 | 96 | 3,424 | 1,789 | 3,777 | 156 |
| ii. | வாடகை | 22,415 | 20,740 | 20,842 | 18 | 22,442 | 13,444 | 24,439 | 99 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,105 | 1,264 | 1,270 | - | 1,108 | 1,041 | 1,306 | 6 |
| iv. | ஏனைய வருமானம் | 119,365 | 130,182 | 107,765 | 77,058 | 111,084 | 84,219 | 91,758 | 50,036 |
| | மொத்தம் | 146,609 | 155,767 | 133,389 | 77,172 | 138,058 | 100,493 | 121,280 | 50,297 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 12,510,843 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 54,245,325 ஆன முத்திரைக் கட்டணங்கள் ஆக இருந்தன. | நிலுவை வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் இருப்பதாக ஏற்றுக் கொள்கின்றேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அளவிடுவதற்கு 06 குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்கு பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | வருடாந்த பாதீட்டை தயாரிக்கம் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் மற்றும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் கீழ் இனங்காணப்பட்ட மற்றம் அதனூடாக அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி பல்வேறு செயற்திட்டங்கள் சபையால் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க்கட்டணங்கள் ரூபா 618,131 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 153,466 ஐ பதிவழிப்பதற்கு சபை தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவை நீர்க் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்நிலுவையில் அறவிட முடியாதரூபா 153,466 ஐ பதிவழிப்பதற்கு சபை தீர்மானமொன்று எடுத்து நீர்கட்டணங்களை பதிவழிக்கும் செயற்பாட்டிற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெவ்வேறு காரணங்களின் பேரில் நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் 22 ஊழியர்களுக்கரிய ரூபா 361,528 ஆன ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 207,163.06 தொகை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் எஞ்சிய அறவிட முடியாத ஊழியர் கடன் மீதியான ரூபா 154,364.94 ஆன தொகைக்காக நியாயப் படுத்தும் குழுவினால் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அறிய தருகின்றேன். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்புறாபொல வியாபார கட்டிட தொகுதியின் 08 கடைகள் மூடப்பட்டிருந்தது. 04 கடைகள் பயன்படுத்தாதிருந்ததுடன் 05 கடைகளின் பின்பகுதியில் | புதிய அறைகளை முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட | பண்டுவஸ்னுவர பிரதேச சபைக்கு சொந்தமான கம்புரபொல வர்த்தக கட்டிட தொகுதி ஒரு சிக்கலான வர்த்தக |

நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வேண்டும். குடியிருப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வந்த போதும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

செயற்பாடுகளுக்காக அல்லது தினமும் பல கடைகள் திறக்கப்படுவதாக நான் ஒப்புக்கொள்கிறேன்.